மாகாணக்கல்வித் திணைக்களம்

வடக்குமாகாணம்

பயிற்சிப்பரீட்சை

சித்திரக்கலை – 2020

தரம் 10　　　முதலாம் தவணை　　　நேரம்: 1 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களிற்கும் இவ் வினாத்தாளிலேயே விடை தருக.**
- **1 தொடக்கம் 5 வரையிலான வினாக்களுக்கு கீழுள்ள படத்தினை அவதானித்து புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.**



1. கம்பளைக் காலத்திற்குரிய …………………… விகாரை ஆகும்.
2. இக் கட்டிடம் முழுமையாக ……………………………..
   ஊடகத்தினால் கட்டப்பட்டுள்ளது.
3. இக் கட்டிடத்தினை நிர்மாணித்த சிற்பி…………………………… ஆவார்.
4. இவ்விகாரையின் கீழ்த் தளத்தில் …………………., ………………… வரிசையாகவும், உயிரோட்டம் கொண்டனவாகவும் செதுக்கப்பட்டுள்ளது.
5. இக் கட்டிடம் ………………………….. செல்வாக்கினைக் கொண்டுள்ளது.

- **06 தொடக்கம் 10 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

6) புதிய களனிவிகாரையில் ஓவியங்களை வரைந்தவர்

   1. ஜோஜ்கீற்　　　2. சோளியஸ் மெண்டிஸ்
   3. M. சார்ளிஸ்　　　4. டேவிட் பெயின்ரர்.

7) M.சார்லிஸின் ஓவியங்கள் வரைந்த இடம்

   1. கத்தொழுவ 2. கரகம்பாட்டிய சுபோதாரமய 3. கோதமிவிகாரை 4. களனி

8) கம்பளைக்காலப் புத்தர் சிலைகளின் விசேட பண்பு

   1. கண்கள் மூடப்பட்டிருக்கும்.　　　2. மகரதோரணம் அமைக்கபட்டிருக்கும்.
   3. ஆடை உடலோடு ஒட்டியிருக்கும்　　　4. குப்த மரபிற்குரியது.

9) “சோளியஸ் மெண்டிஸின்” சிறந்த ஓவியம்

   1. ஹேமமாலாவும் தந்தகுமாரனும்　　　2. சித்தார்த்தரும் தாயாரும்
   3. சித்தார்த்தர் தாமரைப்பூவில் நடந்து வருதல். 4. தாயும் சேயும்

10) உலோகச் சிலைகளினை உருவாக்கும் நுட்பமுறை

   1. வார்த்தல்　　2. பொழிதல்　3. அப்புதல்　4. செதுக்குதல்.

- **11-15 வரையான வினாக்களுக்கு பின்வரும் படத்தினை அவதானித்து விடை தருக.**

11  A

12  B

13  C

14  D

15  E

Education கல்வி அධ්‍යාපන

11) A யின் கலைப்படைப்பின் பெயர் யாது? ……………………………………………………………..

12) B என்ற கலைப்படைப்பினை உருவாக்கியவர் யார்?…………………………………………………………

13) C யின் உட்கருத்து யாது?……………………………………………………………………………

14) D என்ற கட்டடத்தின் பெயர் யாது? ………………………………………………………………

15) E என்ற கட்டிடத்தை கட்டிய கலைஞன் யார்?……………………………………………………….

- **16-20 வரையுள்ள வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள கலையாக்கத்தில் நீங்கள் அவதானித்த கலைத்திறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதான ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**



16. இனங்காணல்:-……………………………………………………..
17. கலைஞர்:- ………………………………………………………
18. ஓவியப்பாணி:- …………………………………………………..
19. வர்ணப்பிரயோகம்:- ……………………………………………
20. ஒழுங்கமைப்பு:- ……………………………………………………..

(20x2=40புள்ளிகள்)

**பகுதி II நேரம்:- 2 மணித்தியாலம்**

**கீழுள்ள பொருட்கூட்ட மாதிரியினை ஒழுங்குபடுத்தி வரைந்து வா்ணம் தீட்டுக**

Education கல்வி අධ්‍යාපන



(30 புள்ளிகள்)

**பகுதி III நேரம்:- 2 மணித்தியாலம்**

**“அ” பகுதியை அல்லது “ஆ” பகுதியைத் அல்லது “இ” இல் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து வரைந்து வா்ணம் தீட்டுக.**

**பகுதி “அ”- படவாக்கம்**

1. கடற்கரையில் மீனவர் வாழ்க்கை
2. சுதந்திரமாக திரியும் காட்டு மிருகங்கள்.

**பகுதி “ஆ”- அலங்காரச்சித்திரம்**

3. 8 x 12 அங்குல அளவுள்ள செவ்வக தளத்தில் விளக்கு ஒன்றிற்கான அலங்காரம்
4. 9 x 9 அங்குல அளவுகொண்ட சிறுவர் ஆடை ஒன்றிற்கான சீத்தைத்துணி அலங்காரம்

**பகுதி “இ”- கிரபிக்சித்திரம்**

5. “கொறோனா வைரஸின் தாக்கமும், பாதுகாப்பும்” என்ற கருப்பொருளின் கீழ் ஒரு சுவரொட்டி அமைக்குக.
6. புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட மென்பானம் ஒன்றிற்கான மேலுறை ஒன்றினை வடிவமைக்குக.

(30 புள்ளிகள்)

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page